திட்டங்களை சிறு புத்தகமாகத் தயாரித்து பொதுமக்கள் தெரிந்து கொள்ளுவதற்கு அந்தந்த ஜில்லா தலைமை அதிகாரிகள் வெளியிடுவதற்கு உத்தரவு பிறப்பிக்க உத்தேசிக்குமா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அந்தந்த மாவட்டங்களில் இருக்கும் டெவலப்மெண்ட் கவுன்சில்களிடம் யோசனைகளைக் கூறி இன்னின்ன செய்ய வேண்டும் என்று சொன்னால் அவை அதைப் பற்றி முடிவு செய்யும். அந்த முடிவை கலெக்டரிடம் சொன்னால் அவர் அதைப் பரிசீலனை செய்வார்.

திருச்சி தலைமை மருத்துவ மனை.

*761 **கேள்வி.—திரு. அ. பெ. தர்மலிங்கம்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா---

(அ) திருச்சி தலைமை மருத்துவ மனையில் வெளிநாட்டிலிருந்து வந்த மருத்துவ சாதனங்களைப் பயன்படுத்தும் முறையில் அனுபவம் பெறாத டாக்டர்கள் உள்ளார்கள் என்பது உண்மையா?

(இ) தகுதி வாய்ந்த டாக்டர்கள் எப்போது நியமிக்கப் படுவர்?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (அ) No,

(இ) Does not arise.

சராசரி வருமானமும் வரியும்.

*762 **கேள்வி.—திரு. புலவர் கா. கோவிந்தன்:** கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா--

தமிழ்நாட்டில், 1950-51-ம் ஆண்டிலும், 1960-61-ம் ஆண்டிலும் ஒரு மனிதனின் சராசரி வருமானம் எவ்வளவு? அதே ஆண்டுகளில் அவன் செலுத்திய சராசரி வரி எவ்வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: "The per-capita income of the Madras State was Rs. 226 in 1950–51 and Rs. 350 in 1960–61, at current prices. The per-capita tax on account of the taxes levied by the State Government was Rs. 6.75 (for the composite Madras State) in 1950–51 and Rs. 12.06 in 1960–61 for the reorganised Madras State (The figure for 1950–51 relating to the present Madras State is not readily available)".

திரு மீ. கலியாணசுந்தரம்: 1950-51 விலைவாசி அடிப்படையில் சில வருமானங்கள் என்ன என்பதை கணக்கிட்டு பார்த்தார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: இப்பொழுது நான் அளித்த விவரங்களைத் தவிர மற்றவைகள் இப்பொழுது என்னிடத்தில் இல்லை. எல்லாம் ஒன்றுபடக்கூடிய அளவில்தான் இது தயாரிக்கப்பட்டிருக்கிறது.